மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026

General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026

பாடம் : தமிழ் Subject : Tamil	Grade 12	T	72	மூன்று மணித்தியாலம்

மேலதிக வாசிப்பு நேரம் 10நிமிடம்

சுட்டெண் : .....

அறிவுறுத்தல்கள் :

- **பகுதி I** இல் 1ஆம் 2ஆம் 3ஆம் வினாக்களுக்கும், **பகுதி II** இல் **"அ"** பகுதியில் ஒரு வினாவுக்கும் **"ஆ"** பகுதியில் ஒரு வினாவுக்கும் விடையளிக்குக.
- எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.
- பகுதி I இல் இரண்டாம் வினாவில் **பத்து** பல்தேர்வு வினாக்கள் தனியாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

பகுதி - I

1) மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ. ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
இழை அணி யானை இயல்தேர் அஞ்சி
அதியமான் பரிசில் பெறாஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

1) இச்செய்யுளில் திணை, துறை முதலானவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.
2) அதியமானின் மனம் சலியாத கொடை எவ்வாறு விவரிக்கப்படுகின்றது?
3) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமையணியை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. என்பன சொல்லி, இரும்பு அன மேனியர் ஏனோர்முன்,
வன் பணை வில்லினன், மல் உயர் தோளினன், வாள் வீரற்கு
அன்பனும், நின்றனன் : நின்றது கண்டு, அரி எறு அன்ன
முன்பனில் வந்து, மொழிந்தனன், மூரிய தேர் வல்லான் :

1) இச்செய்யுள் இடம் பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
2) வேடர் சேனையின் சிறப்பினை புலப்படுத்த கையாண்டுள்ள அணி யாது? விளக்குக.
3) வாள்வீரர், தேர்வல்லான் என்று சுட்டப்பெறுபவர்கள் யார் யார்?

(10 புள்ளிகள்)

Past Papers Wiki

2) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு வினாவுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1) பின்வருவனவற்றுள் பின்னுயிர்

1. எ 2. ஏ 3. அ 4. ஆ 5. ஊ (.....)

2) பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக **மட்டும்** வரும் எழுத்து.

1. க் 2. ச் 3. ர் 4. ட் 5. ற் (.....)

3) ஒலிப்பு முறையில் எகரம் வேறுபட்டு ஒலிப்பது

1. எலி – எருது 2. எருது – எவர் 3. எவர் - மென்மை
4. வெற்றி – வெளி 5. எல்லாம் - எலி (.....)

4) பின்வருவனவற்றுள் திரிதல் இடம்பெற்ற சொல்

1. நின்றான் 2. விட்டான் 3. கற்றான் 4. போயினான் 5. மரக்கொப்பு (.....)

5) பின்வருவனவற்றுள் குற்றியலுகரமாக அமைவது

1. வரவு 2. குதிரை 3. கன்று 4. உருவம் 5. மறு (.....)

6) பின்வருவனவற்றுள் பன்மை உணர்த்துவது

1. வந்தார் 2. போற்றுவார் 3. கூறுவர் 4. தாயார் 5. அவர் (.....)

7) அமைப்பு ரீதியாக தனித்து நிற்கும் கூட்டுப்பெயர்

1. மின்சாரம் 2. கடற்கரை 3. பாடசாலை 4. கதைப்பொருள் 5. பேசுபொருள் (.....)

8) "எரி" என்ற வினையடியிலிருந்து பிறக்கும் ஆக்கப்பெயர்

1. எரிச்சல் 2. எரித்தல் 3. எரித்தவன் 4. எரித்தமை 5. எரிந்தது (.....)

9) குமார் பயிருக்கு நீர் ஊற்றினான் என்பதில் "கு" உருபு உணர்த்தும் பொருள்

1. காரணப்பொருள் 2. கொடைப்பொருள் 3. நட்புப் பொருள்
4. தகுதிப் பொருள் 5. உடைமைப் பொருள் (.....)

10) அரசன் புகழ் ஓங்குக - இங்கு ஓங்குக என்பது

1. ஏவல் வினை 2. தன்வினை 3. வியங்கோள் வினை
4. காரணவினை 5. செய்வினை (.....)

(20 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பைத் தெரிவு செய்து **250-300** சொற்களில் கட்டுரை எழுதுக.

(அ) நகரமயமாக்கலும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்
(ஆ) செயற்கை நுண்ணறிவு சாதக பாதகங்கள்
(இ) தொலைக்காட்சி பயன்பாட்டின் விளைவுகள்
(ஈ) பன்மொழிப் புலமையின் அவசியம்
(உ) "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

(20 புள்ளிகள்)

Past Papers Wiki

பகுதி – II

"அ" பிரிவு

4) திருக்குறள் குற்றங்கடிதல் என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றினை விளக்குக.

(அ) குற்றங்களாகக் கூறப்படுவன.
(ஆ) குற்றங்கடிதல் தொடர்பாக பொதுவகையால் கூறப்படுவன.
(இ) குற்றங்கடிதல் தொடர்பாக சிறப்புவகையால் கூறப்படுவன.
(ஈ) கையாளப்பட்டுள்ள அணிகள்.

(20 புள்ளிகள்)

5) கங்கையாற்றின் வடகரையில் சுமந்திரன் பரதனுக்கு குகனை அறிமுகம் செய்வது முதல் குகன், பரதன் இருந்த இடத்திற்கு வந்தமை வரையான பகுதியினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) குகனது வீரமேம்பாடும் நட்பும்
(ஆ) பரதனது வலிமையும் பெருந்தன்மையும்
(இ) பரதனது தோற்றமும் அதனைக் கண்ட குகனின் உணர்ச்சி வெளிப்பாடும்
(ஈ) கையாளப்பட்டுள்ள உவமை அணிகள்

(20 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அ) புதுமைப்பித்தனின் **தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை** என்ற கட்டுரையில் கிராம வாழ்வின் தனித்துவம்.
(ஆ) மணிவாசகர் அருளிய திருவாசகம் **கோயிற் திருப்பதிகத்தில்** திருப்பெருந்துறை இறைவனின் பெருமைகள்
(இ) அழகிரிசாமியின் **தியாகம்** என்ற சிறுகதையில் செட்டியாரின் நாளாந்த செயற்பாடும் சிப்பந்திகள் மீது அவர் காட்டும் கண்டிப்பும்
(ஈ) **பெண்விடுதலை** எனும் கவிதையில் பெண் விடுதலைக் கருத்துக்கள்
(உ) **இரு துயரங்கள்** - நாடக எழுத்துருவில் நாடக அளிக்கை உத்திகள்

(20 புள்ளிகள்)

"ஆ" பிரிவு

7) (அ) பல்லவர் கால பக்தி இலக்கியங்களின் பொதுவான பண்புகளை விளக்குக.

(ஆ) மணிவாசகரின் இலக்கிய பங்களிப்புக் குறித்து விபரிக்குக.

(இ) பக்தி, பக்தி சாரா இலக்கியங்களில் கைக்கிளைமரபு வெளிப்படுவதனை விளக்குக.

(20 புள்ளிகள்)

8) ஒல்லாந்த ஆட்சிக்கு முன்னர் ஈழத்தில் எழுந்த

(அ) சைவசமய நூல்கள்
(ஆ) கிறிஸ்தவ சமய நூல்கள்
(இ) வரலாற்று நூல்கள்
(ஈ) வைத்திய சோதிட நூல்கள்
(உ) கண்ணகி தொடர்பான நூல்கள்

ஆகியவற்றுள் எவையேனும் **மூன்று** குறித்து விபரிக்குக.

(20 புள்ளிகள்)

9) (அ) சுருக்கமான விடை தருக.

1. உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஆகியவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
2. கத்தியால் வெட்டினான்
   தந்தையோடு சென்றான் - இவை சொல்லுருபு ஏற்று வரும் வகையில் இவ்வாக்கியங்களை தனித்தனியே எழுதுக.
3. தான் - மாற்றுப் பெயராகவும் படர்க்கைத் தற்சுட்டுப் பெயராகவும் வர ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.
4. சித்திரை வந்தாள்
   மயில் வந்தாள்
   இவை ஒவ்வொன்றும் எவ்வகை ஆகுபெயர் எனக் குறிப்பிடுக.
5. உள்நாட்டு உற்பத்தி அபிவிருத்தி அடையாமை நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது - இதில் வந்துள்ள வழுவினை திருத்தி எழுதுக.

(15 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

1. தொழிற்பெயர் - வினையாலணையும் பெயர்
2. தன்வினை - பிறவினை
3. இனவெழுத்துக்கள் - சுட்டெழுத்துக்கள்

(5 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library